# நெய்தல் நிலவியல் மக்கள் ஒழுகலாறுகள்

***அ. பாபு***
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
திருவள்ளுவர் பல்கலைக் கழக இணைவுப் பெற்ற
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ், கலை, அறிவியல் கல்லூரி
மயிலம்
https://doi.org/10.5281/zenodo.14383379

**ஆய்வுச்சுருக்கம்**

*நெய்தல் நிலத்திற்கு தொல்காப்பியம் வருணன் மேய பெருமணல் உலகம் எனக் குறிப்பிடுகிறது. இதனால் கடற்கரை என்பதே மணல் நிறைந்த பெருவெளி என்று கொள்ளப்பட்டதாக கருதலாம். சங்கப் பாடல்கள் கடற்கரைப் பகுதி வெண்மணல் வெளியாக இருந்தது என்றும் கடற்கறையிலேயே இவர்கள் தொழிலின், கருவிகள் கிடந்தன என்றும் கூறுகின்றன. நெய்தல் நிலத்திற்கு இரங்கல் உரிப்பொருளாகும். அது தலைவியின் மன இரங்குதலைக் குறிப்பதாகும். தலைவன் இரங்குதல் இயல்பானது அன்று அதனால் தலைவி இரங்குதல் என்று கூறப்படுகிறது. கடல்மேல் சென்ற தலைவன் வாராமையின் அவன் நிலை குறித்துத் தலைவிக்கு ஏற்படும் ஏக்கம் இரங்கல் எனப்படும். தலைவனுக்கு வழியில் என்ன நேர்ந்த்தோ என்றும் அவனுக்கு ஏற்படும் இடையூறுறெண்ணித் தனக்கு ஏற்பட்டதென உணர்ந்தும் வருந்துதலும் இயல்பு இந்நிலையும் இரங்கல் எனப்படும். மாலை நேரங்களில் மகளிர் தங்கள் கணவர் மீன்பிடித்துத் திரும்பி வருகிறார்களா? என்று கடற்கரை வந்து காத்திருப்பர். எனவே இரங்கல் நெய்தல் எனப் பெயர்பெற்றது பொருத்தமாகும். இத்தகைய பெயர் பெற்ற நெய்தல் நில மக்களின் ஓகலாறுகளை பற்றி விளக்குவதாக இவ்வாய்வு அமைகின்றது.*

**முன்னுரை.**

*ஒவ்வொரு மக்களின் ஒழுக்கம் அவர்கள் வாழும் இடத்தைத் சார்ந்தே அமைக்கின்றது. அவ்வாறு பார்க்கும் பொழுது மக்களின் உணவு முறைகள் பேச்சு வழக்குகள் உடைகள் மனித ஆற்றல் போன்றவை மாற்றம் பெற்று விளங்குவதை கண்கூடவே காணமுடிகின்றது இத்தகையை முறைகளே சங்க காலத்தில் இருந்த வந்துள்ளதையும் நம்மால் இலக்கியம் வழி இறிந்து கொள்ள முடிகின்றது. இத்தகைய வரிசையில் நெய்தல் நிலத்தின் பண்பாடுகளை பின்வரும் தலைப்பின்கீழ் விரிவாக காண்போம்.*

*நெய்தல் நிலமக்களின் தலைவி ஒழுகலாறுகள்*

*நெய்தல் நிலத் தலைவி தனது ஊரின் சிறப்பைக் கூறக் கருதுகிறாள். அப்பொழுது என் ஊரின் கடற்கரையில் ஞாழல் மரங்கங்களும், பசுமையான இலைகளையுடைய பனைமரங்கள் நிற்கும் இவற்றின் மடல்கள் தாழ்ந்து தொங்கும் தன்மை தலைவி கூறும் பாடல் குறுந்தொகையில் கூறப்படுகிறது.*

*சான்றாக*

***கடலும் கானலும் தோன்றும்***
***மடல்தாழ் பெண்ணை எம்சிறு நல்ஊரே***

***( குறுந்.பா.81)***

*எனும் பாடல் அடிகளில் நெய்தல் நிலமானது மணல் நிறைந்த பகுதி என்பதும் தாழையும் பனையும் பொருவாரியாக காணப்படும் என்பதை சுட்டிக்காட்டுகிறது. சங்கப் பாடல்கள் கடல்சார் மக்களைப் பொதுவாக பரதவர் நுளையர் என்னும் பெயரால் அழைப்பர். பாட்டுடைத் தலைவனைக் குறிப்பிட புலம்பன், சேர்ப்பன், துறைவன், கொண்கன் என்பன ஆளப்பெறுகின்றன.*

*கடியலூர் உருத்திரங் கண்ணனார் பரதவர்களைப் புன்தலை இரும்பரதவர் (பட்டி.பா.அடி90) என்றுகூறுகிறார். உரையாசிரியர் இதற்குப் புற்கென்ற தலையை உடைய இரும்பரதவர் என உரை கூறுவார். புன்றலை என்பதற்கு எண்ணெய் தேய்த்து வாரப்படாத தலை என்றும், இரும்பரதவர் என்பதற்கு ஒன்றாகச் சேர்க்கும் பரதவர் என்றும், நச்சினார்கினியர் விளக்கம் கொடுக்கிறார். பரதவர் தலையில் தொடர்ந்து உப்பு நீர் பட்டுக் கொண்டிருப்பதால் இவர்களின் கருப்பு முடி பழுப்பேறி விட்டது. அதன் பிறகு நிறம் மாறிவிட்டது என்பது பொருளாகும். அம்முவனார் எனும் புலவர் பரதவர்களை வேட்டையாடும் இனமாக கருதுகின்றார். பரதவர்கள் மீனைப்பிடிக்க உளியை எறியும் செயல் இவர்களைப் பற்றிய இந்த கருத்தை உருவாக்கி இருக்கலாம். என்று கூறுகிறார். இதனை,*

***பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்***
***(அகம்.பா.140)***

*என்ற பாடல் அடி பரதவர்களை வேட்டையாடுபவர்களாகவே குறிப்படுகின்றன. நெய்தல் நிலத்து மக்கள் நிளையர், பரதவர், வலைஞர் என்றழைக்கப்படுவர். இவர்களது முக்கிய தொழில் மீன்டித்தலும், உப்பு விளைவித்தலும் ஆகும். நிலாப்போலும் மணலையுடைய கரையினில் குடமுழாப் போலும் காயையுடையதாழையை வேலியாகவுடைய குளிர்ந்த இளமரக்காவின் கண்ணே வந்து செறிதலையுடைய துவலையின் ஓசையும் நிரைத்த மீன் படகாலே வேட்டையாடுவார் வந்து கரையைச் சேரும் ஆரவாரமும் பெரிய கழியிடத்தே உப்புப் பாத்தியில் வெள்ளிய உப்பை விற்கும் உமணர் ஒலியும் மதுரைக் காஞ்சியில் குறிக்கப் பெறுகின்ற எனும் செய்தியை மதுரைக் காஞ்சி கூறுகிறது. (மதுரைக்காஞ்சி 114, 118) தம் தந்தையார் கொண்டுவந்த கொழுமையாகிய மீனின் வற்றலைக் கவர வரும் பறவைகளை அகற்றும் பொருட்டுப் புன்னை நிழலில் பெண்கள் தங்கியிருக்கின்றனர் என்று உலோச்சனார் கூறுகின்றார். (அகம்.ப.20, 1-3) மேலும் கடலின் கண் கிடைக்கும் முத்து விலையுயர் பொருளாக அமைந்து அவர்களுக்கு வளம் சேர்கின்றது. கடற்கரை ஓரங்களில் இவர்கள் வாழ்ந்த குடியிருப்புகள் பட்டினம் எனப்படும். சிறு குடியிருப்புகள் பாக்கம் எனப்படும் என்று பேராசிரியர் சு. வித்தியானந்தன் நெய்தல் நில மக்களின் குடியிருப்பு பற்றிக் குறிப்பிடுகிறார். (வித்தியானந்தன் அ தமிழர் சால்பு ப. 213) மேலும் கடற்கரையில் தோன்றி வளர்வதற்கும் கடலின்கண் கலங்களைச் செலுத்துவதற்கும் அடிப்படைக் காரணமாக இருந்தவர்கள் நெய்தல் நில மக்களே ஆவார். வணிகச் சொல்வர் மிகுதியாக வாழும் நாகரிக மேம்பாடுடையனபோல் காட்சியளிப்பதாகச் சங்கப் புலவர்கள் உணர்ந்து பாடியுள்ளனர். தலைவன் ஒருவன் தலைவியை விட்டுப் பிரிந்திருக்கிறான் தலைவி இரங்கத்தக்கவளாக வருத்தில் ஆழ்ந்திருக்கிறாள் அவள் வருத்ததில் பங்கு கொள்ளவேண்டி கடல் முழங்குகின்றதா? அல்லது இத்தலைவி போன்று இக்கடலும் தன் காதலை இழந்து அவள் ஆற்றாமையில் அரற்றுகின்றதா? என்று தலைவி கருதுவதாக அமைந்த செய்தியை கலித்தொகை குறிப்பிடுகிறது. (கலித்தொகை 1-6) விளையாடும் ஆயமகளிர் வெண்மையான மணலின்கண் புதைந்து யாம் மறந்து செ ன்ற புன்னையின் வதை முளைத்து வரத் தேன்கலந்த தீவிய இனிய பாலைப் பெய்து யாம் வளர்த்தோமாக நும்போல் சிறந்து வளர்ந்திருத்தலின் இது தமக்குத் தங்கையாகும் என்று என் அன்னை கூறியுள்ளாள். எனவே இதன் கீழிருந்து நும்மோடு நகையாடி மகிழ்த்தலை நாணுகின்றேன் என்று புன்னையினைத் தங்கையாக எண்ணிக் காதல் களிப்பினை*

அப்புன்னை நிழலில் நிகழ்ந்த நாணும் தலைவிளை நக்கீரர் கூறியுள்ளார். (நற்.பா.1-9) இஃது இயற்கையோடு ஈடுபட்டிருந்த பழந்தமிழரின் உள்ளப் பாங்கிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பரந்த கடல் அலைகள் கரையில் உள்ள பாறையில் மோதி உடைகிறது. அவை நுரையாக மாறுகிறது. இந்த நுரையின் ஆயுட்காலம் கொஞ்சம் தான் இருந்தது. இதனை, குறுந்தொகை விளக்குகின்றது. சான்றாக

**கல்பொரு சிறுநுரை போல**
**மெல்ல மெல்ல இல்லாகுதுமே**
**(குறுந்தொகை.பா.290)**

இப்பாடல் அடிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். மேலும். கடற்கரையில் பாறைகளும் இருந்தன என்பதை இவ்வரிகள் சுட்டிக் காட்டுகிறது.

## நெய்தல் நிலப் பறவைகள்

நெய்தல் நிலத்திற்குரிய பறவையினங்களில் அன்னமும் ஒன்று இதனை ஐந்தறிவுடைய உயிரினமாக சிறப்பிக்கின்றனர். இதன் கால் சிறிது நீண்டு மயிரடர்ந்திருக்கும் காலின் நுனி குவிந்து தோற்பை காணப்படும். குறுகிய கால்களையுடைய அன்னமும் உண்டு பழங்காலத்தில் அன்னம் காதலர்களிடையே தூது சென்றதாக இலக்கியங்கள் கூறுகின்றன. இது நீரிலும் நிலத்தினும் வாழும் இயல்பை உடையது. என்பதை அறியமுடிகிறது. மேலும் நெய்தல் நிலத்தில் காணப்படும் மற்றொரு பறவை வெள்ளாங்குருகு ஆகும் இது நெய்தல் நிலத்தில் வாழும் பறவை இனங்களில் இதுவும் ஒன்று. இதன் வயிற்றுப் புறம் வெண்மை நிறமாக இருப்பதால் வெள்ளாங்குருகு என அழைக்கப்பட்டது. இது உருவத்தால் சிறியது அதனால் சிறு வெள்ளாங்குருகு என அழைக்கப்படுகிறது. தற்காலத்தில் இப்பறவையை "வாலாட்டிக் குருவி" என்பர் இக்குருவியின் சிறகை வெள்ளாடைக்கு உவமை கூறுவதுண்டு நற்றிணைப் பாடலொன்று கூறுகிறது. ( நற்பா.70 1-2) இப்பறவை காதலர்க்கிடையே தூது செல்லப் பயன்பட்டதாக கூறுவதை அறியலாம். நெய்தல் நிலத்தில் இன்றியமையாத பறவை காக்கையாகும். காக்கைகள் இருவகைப்படும். கடற்கரைப் பகுதியில் வாழும் காக்கை கடற்காக்கை எனவும், மற்றையப் பகுதியில் வாழும் காக்கை ஊர் காக்கை எனவும், அழைக்கப்படுகின்றன. கடற்காக்கை உருவத்தில் பெரியது ஊர்காக்கை சிறியது. இதனால் இக்காலத்தில் முன்னயதை அண்டங் காக்கை எனவும், பின்னயதை மணிக் காக்கை எனவும் அழைப்பர். கடற்பகுதிகளில் வாழும் இந்த வகைக் காக்கைகளில் கழுத்துப் பாகத்தைத் தவிர மற்றையப் பகுதிகள் கருநிறமாக இருக்கும். கழுத்தில் மட்டும் வெண்ணிறம் படிந்திருப்பதால் இவை சிறுவெண் காக்கை எனப்படும்.. இக் காகம் கரைந்தால் விருந்தினர் வருவார் என்பது இன்றளவு மக்களின் நம்பிக்கை அதற்காக இவற்றிற்குச் சோறு பலியாக இடுவது இன்றும் வழக்கத்தலிருக்கின்றன. இக்காக்கைகள் நெய்தல் கொடியின் பசிய இலைகளைக் கலக்கிச் சிதைத்து இறைத்தேடும் தன்மைக் கொண்டது. இவற்றின் உள்வாய் சிவந்திருக்கும் என்பதனை குறுந்தொகையானது எடுத்துரைக்கின்றது
சான்றாக.

**சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பெருந்தோடு**
**(குறுந்தொகை.பா.334)**

எனும் பாடல்வரியில் காக்கையின் வாய் சிவந்து காணப்படும் என்பதை அறிந்து கொள்ளலாம். மேலும் சேவல் கொக்கு எனும் பறவையும் நெய்தல் நிலத்திற்கு உரியது என்று இலக்கியங்கள் கூறுவதைக் காணமுடிகிறது. சிறுவர்கள் கருமையான சே ற்றுக் குழம்பினை உடைய வயலில் விரித்த வலையில் சேவல் கொக்கு அகப்பட்டத்து. அதனால் பேடைக் கொக்கானது இரையுண்ணாமல் தனித்து வருந்தி தன் குஞ்சு

களைத் தழுவிக் கொண்டு பனைமரத்தின் கண் அன்பு மேலிட்டாள் ஒய் என ஒலி செய்யும் இச்செய்தியை அகநானூற்றுப் பாடல்(அகம் 290) குறிப்பிடுகிறது. இச் செயலானது பறவை இனத்தின் அன்பின் மிகுதியை உணரமுடிகிறது.

**நெய்தல் நில விலங்கினம்**

உயிரினம் என்ற சொல் அறிவியலில் தாவரம் விலங்கு ஆகிய இரண்டையும் குறிக்கிறது ஆயினும் சாதாரணமாக விலங்கினங்களை (பறவைகள் உட்பட) உயிரினம் என்றும் தாவரங்களை பயிரினம் என்றும் அழைக்கின்றோம். தொல்காப்பியர் புல்லையும், மரத்தையும், ஓரறிவுடைய உயிர்கள் என்று கூறுகிறார். நெய்தல் நிலத்தில் விலங்கினமாக சுறா, ஆமை, மீன், போன்றவை கூறப்படுகின்றது. சுறா மீனானது மீன் இனங்களில் மிகப்பெரியதாகும். இவை நீண்ட கொம்பையும் திரண்ட வலிமையையும் உடையது. நிறுத்தப்பட்ட கலங்களின் அருகிலும், அங்குள்ள ஓடைகளிலும் பெரியசு றா மீன்கள் பயம் அறியாமல் சுற்றித்திரியும். என்று (நற்.19) பாடல் விளக்குகின்றது. நெய்தல் நிலத்தில் மற்றொரு விலங்கினம் ஆமை இது வெண்மையான மணல் மேட்டிலும் உப்பங்கழியிலும் யாரும் அறியாமல் முட்டையிடும் என்றும், அம்முட்டையினைப் பிளந்த வாயினை உடைய ஆண் ஆமைகள் குஞ்சு ஆமைகள் முட்டையில் இருந்து வெளிவரும் வரை அதைக் காக்கும் என்றும் கதையாக கூறப்படுகின்றது இதனை அகநானூறு பாடல் விளக்கி நிற்பதை அறிந்து கொள்ளலாம். கடற்கரையில் வாழும் சிறு விலங்குகளும் நண்டும் ஒன்று இது அலவன் என்றும், ஞெண்டு, என்றும் வழங்கப்படும். இதன் கண்கள் விசித்திர அமைப்புடையன மனிதர்கள் நண்டினை உணவாக உட்கொண்டனர். அதன் கால்கள் வளைந்து இடையில் துண்டங்களாக காணப்படுகிறது. கொக்கு போன்ற பறவைகட்கு அஞ்சியோடும் இயல்பினையுடையது. கரையோரமாக காணப்படும். முள்ளிச் செடிகளிலும் வேர்களிலும் மற்றைய மரவேர்களிலும் பொந்தமைத்து வாழும் தன்மைக்கொணடது. மேலும் நண்டினால் தாக்கப்பட்ட இறால் மீன் தன்மையை, ஐங்குறுநூறு பாடல் தெளிவா எடுத்துரைப்பதை இலக்கியத்தில் காணமுடிகிறது. அடியில் நண்டின் மற்றொரு பெயர் அலவன் எனும் பெயர் குறிக்கப்பட்டுள்ளதையும் அவ் அலவனால் இறால் மீன் தாக்கப்பட்ட சொய்தியையும் காணமுடிகிறது. நெய்தல் நிலத்தில் சங்குகள் வளை எனவும் அழைக்கப்படுகின்றது. கடற்கரையோரத்திலும் கடலிலும் வாழும் தன்மைக் கொண்டது சிற்பி, நந்து, ஏரல் போன்றவை சங்கிற்கு வழங்கும் பொதுப் பெயர் ஆகும். கடலில் வாழும் இவற்றைக் கடல் அலைகள் கொண்டு வந்து கரை சேர்க்கும். தொல்காப்பியர் சங்குகள் ஈரறிவு கொண்ட உயிரி என்று வகைப்படுத்துகின்றார். என்பதனை

**நந்து முரளும் ஈரறிவினவே**
***பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே***

**(குறுந்தொகை.120)**

என்னும் நூற்பா வழி அறியலாம். கடற்கரையில் வெண்மணல் பரப்பில் ச ங்குகள் ஊர்ந்து செல்லும் காட்சி கவின் மிகுந்தது. அவை ஊர்ந்து செல்லும் போது அவற்றின் கால்கள் மணலில் வரிகளைத் தோற்றுவிக்கும். அவ்வரிகள் வயல் நிலத்தில் ஏர் பூட்டி உழுத பின்னர் தோன்றும் வரிகளைப் போன்று காட்சியளிக்கும். பண்டைய தமிழர்கள் சங்குகளை ஒரு இசை க்கருவியாகவும், உபயோகப்படுத்தினர். திருமண நிகழ்வுகளில் போது முரசுகளின் முழக்கத்தோடு சேர்ந்து சங்குகளும் ஒலிக்கும். வலம்புரிச் சங்கு சங்கினங்களில் தலைச் சிறந்தது. மீன் பண்டைய தமிழர் கடலில் வாழும் மீன் அவற்றின் வடிவம், பருமன், நிறம் போன்ற இயல்புகளைக்

*கொண்டு அவற்றிற்குப் பல்வேறு வகையான பெயர்ளைச் சூட்டி அழைத்தனர். அவர்கள் மீன்களில் சுறா, வாளை, விரால், கெண்டை, கெடிறு, கயல், ஆயிரை, ஆரல், இறால், எனப் பல்வேறு வகையாக கூறத்தொடங்கினர்.*

**நெய்தல் கொடி**

*நெய்தல் எனும் தாவரம் கொடிவகையைச் சார்ந்தது. ஆனால் திரு. பி.எல் சாமி அவர்கள் இதனை செடி என்று குறிப்பிடுகிறார். இவருடைய இக்கருத்தை ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று. என்பதை அக்கொடியை நேரில் கண்டவர் நன்கு அறிவர். இக் கொடி நீரிலும் வாழும் நிலத்திலும் வாழும். தண்டு மிகவும் திரட்சி பொருந்தியது. அதன் நடுவே துளை காணப்படும். இதன் உயரம் நிமிர்ந்த தண்டுகள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும் இக்கொடி அதிகமாகக் கடற்கறையைச் சூழ்ந்துள்ள இடங்களில் வளரும். இதனால் இது ' இருங்கழி நெய்தல் சு எனச் சி றப்பிக்கப்படுகின்றது. இதன் இலைகள் சி றியன ஆதலால் இது பாசடை என்றும் சி றுபாசடை என்றும் செய்யுள்களால் சி றப்பிக்கப்படுகிறது. இவ்யிலையை யானைக் குட்டியின் செவிமடலைப் போன்று காட்சியளிக்கும் நெய்தல் மலர் நறுமணம் பொறுந்தியது இப் பசுமையான கள்ளின் மணத்தையொத்துக் காணப்படுவதால் வண்டினங்கள் இம்மலரைப் பெரிதும் விரும்புவதாகவும், சங்கச் செய்யுள்கள் குறிப்பிடுகின்றன. நெய்தல் பூ அழகுக்காக வளர்ப்பதுண்டு அதையே நீலாற்பலம், நீலம், கருநெய்தல், கருங் குவளை , பானல் என்று பலபெயரால் கூறுவர்.*

**நெய்தல் மலர்**

*நெய்தல் மலர் நீல நிறத்தை உடையது. செருத்தி மலர் பொன் வண்ணத்தது. இவ்விரு மலர்களையும் சேர்த்து மாலைகள் கோத்து ஆண்கள் தம் மார்பில் அணிந்து கொள்வர் என்றும் பொன்னொத்த செருத்தி மலரும் நீலமணி போன்ற நிறத்தையுடைய நெய்தலும் சேர்ந்த ஆரம் அழகு மிகுந்த தாகச் காட்சி தரும். கடலாடும் மகளிர் தம் தலையில் சூடுவதற்கோ அல்லது தாம் செய்து விளையாடும் வண்டற் பாவைளுக்குச் சூடி மகிழ்வதற்கோ மாலைலகள் தொடுக்கும் பொழுது வெறுமனே நீல நிற நெய்தல் மலர்களை மட்டும் தொடுக்க மாட்டார்கள் அவ்மாலை அழகு பெறவேண்டி அடம்பு, புன்னை, செருத்தி போன்ற பல்வேறு நிற மலர்களையும் பச்சிலைகளையும் சேர்த்து தொடுப்பர் என்று இலக்கியங்கள் சுட்டுகின்றது.*

*சான்றாக*

> ***நெய்தல் நறுமலர் செருத்தியோடு விரை***
> ***மதிப்ப நக்க கணபோல் நெய்தல்***
>
> ***(குறுந்தொகை 230)***

*இப்பாடல்வரிகள் மூலம் அறியமுடிகிறது. மேலும் நெய்தல் மலர் காலை (வைகறைப் பொழுதில்) மலரும்தன்மைக் கொண்டதை வைகறை மலரும் யெதல் (ஐங் 145) ஐங்குறுநூ சுட்டுகிறது. நெய்தல் நிலத்தில் முள்ளியானது கடற்கரையோரங்களிலோ அல்லது அடைக்கரைப் பகுதிகளிலே செறிவாகக் காணப்படும் இது கொடியினத்தைச் சேர்ந்த தாவரமாகும். முண்டகம் என இலக்கியத்தில் இழைக்கப்படுகின்றது. இம்முள்ளி பல வகைப்படும் அவற்றுள் முதன்மையானது அடுக்கு, முள்ளி, கழிமுள்ளி, ஆற்றுமுள்ளி, கழுதைமுள்ளி, செம்முள்ளி, நீர்முள்ளி, வறண்ட முள்ளி என்பனவும் அவற்றின் வகை பல உண்டு முள்ளியின் முட்கள் கூர்மையானவை இம்முட்களை அணிலின் பல்லுக்கு உவமை கூறுவர். இதன் இலைகள் குவிந்து காணப்படும் மலர்கள் நீல நிறமுடையவை அம்மலர்களை நீல மணியின் நிறத்துக்கு உவமை கூறுவர். பண்டைத் தமிழர் பூவின் காம்பு வெண்மை நிறமுடையது இது மீன் முள்ளுக்கு உவமை கூறப்படும் இம் மலர்கள் காற்றால் உதிர்ந்து*

கடற்கரை மணலில் பரவக் காணப்படும். இக் காட்சி நூல் அறுந்து அதனால் சிந்திய முத்துக்களைப் போன்று சாட்சியளிக்கும் என்று ஐங்குறுநூறு கூறுகிறது.

**பனைமரம்**

பனை நெய்தல் நிலதிற்குறிய மரவகையாகும் கடற்கரைப் பகுதிகளில் மணல் நிறைந்த இடத்தில் வாழும் ஒருதாவரமாகும். ஆயினும் கடற்கரை சாராத உள் நாட்டிலும் வளரக் கூடியவை இலக்கியங்களில் இது பெண்ணை என்றும் போந்தை என்றும் அழைக்கப்படுகிறது. பனை மரம் திரண்ட வளைந்த அடியை உடையது இது முழவு போல் காணப்படும் பல இடிகள் வளரக்கூடியது இது மீனவர் குடில்களை சார்ந்தவை பனையின் வலப்பக்கத்தே தோன்றும் வெள்ளிய குறுத்தோலையைச்சேர மன்னர் அணிவது வழக்கம் நெய்தல் நிலத்தார் பனங்கள்ளையும் நுங்கையும் விரும்பி அருந்துவர் பனங்காய் பெரியதாய் திரட்சியுடன் நார்கள் பொருந்தியதாக்க் காணப்படும் மீனவர்கள்தம் குடில்களைச் சுற்றி வேலி கட்டப் பனை ஓலையை உபயோகப்படுத்துவர் அன்றில் தூக்கணாங் குருவி போன்ற பறவையினங்கள் பனையின் கொழுவிய ஓலைகளில் சிறு குஞ்சுகளால் கூடமைத்து வாழ்வதுண்டு

**நெய்தல் நில மக்கள் வாழ்க்கை முறை**

பரதவர் கடற்கரைச் சோலையில் உள்ள சிறு குடிப்பாக்கத்தில் வசித்தனர். கடல்சார் மக்களின் கடற்கரை குடியிருப்புகளைப் பற்றிய செய்திகள் இலக்கியத்தில் குறைவாகத்தான் கிடைக்கின்றன. கடற்கரை ஊரைக் குப்பம், பாக்கம் என்றும் கூறுகின்றனர். நெய்தல் நிலத்தில் உள்ள ஊர்களில் உள்ள தெருக்களைப் பற்றியும், இவற்றில் குடிசைகளைப் பற்றியும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றது. கடற்கரையில் வாழும் பரதவர் குடிலைப் பற்றிக் குறிப்பிடுகிறது. கடற்கரையில் உள்ள சிறு ஊர் நிலவைப் போன்ற வெண்மையான மணல் நிரம்பிய தெருக்களை உடையது. இந்த தெருக்களில் புல்லால் வேயப்பட்ட குடிசைகள் நெருக்கமாக இருந்தது குடிசை நிறைந்த இந்த ஊரை ஊர் என்று குறிப்பிட் முடியாத அளவிற்குச் சிறியதாக அருந்தது அந்த ஊரில் உள்ள வீடுகளும் கூட தங்குவதற்கு அவ்வளவு வசதியாக இருக்கவில்லை. இந்த ஊரில் உள்ள வீடுகள் சில பனை ஓலையால் வேயப்பட்டிருந்தன. கடற்கரையில் உயரமாக வளர்ந்து நின்ற பனை மரத்தில் இருந்து கழித்து வீழ்த்தப் பட்ட பனை ஓலையைக் கூரை யாக வேயப்பட்ட்டிருந்தனர் அத்தகு வீடுகளின் சு வர் பகுதி கூட ஓலையால் கட்டப்பட்டிருந்தன. சில குடிசைகள் தாழை மடல் ஓலையாலும் (தந்தாள் தாழைக் குடம்பை நற் 370) கட்டப்பட்ட செய்தியையும், நீர் முள்ளிச் செடிகளாலும், முண்டம் வேய்ந்த குறியிடைக் குரம்பை (நற்றிணை 370) காயல் என்னும் புல்லாலும் காயல் வேய்ந்த தேயா நல்லில் (அகநானூறு370) வேயப்பட்டிருந்தன பரதவர்கள் சிறு சிறு குடில்களில் கூட்டகூட்டமாக வாழ்ந்தனர் அவர்களில் சிற்றூர்களில் மணல் மேட்டில் இருந்தன பனைமரங்களாலும் நீரினாலும் சூழப்பட்டவை தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்ததால் அக்குடியிருப்புகள் அழியா மரபின் மூதூர் எனப்பட்டனர். இவை தற்காலத்தில் குப்பம் எனப்படுகின்றன பரதவர்கள் வாழும் பகுதியை பாக்கம் எனும் பெயராலும் அழைக்கப்பட்டமை இலக்கியத்தில் பெரும்பாலும் காணமுடிகிறது. பரதவர்களின் வாழ்க்கை முறையை முற்றிலும் அறிய இலக்கியம் துணைபுரிவதை அறியமுடிகிறது.

**பரதவர்களின் தொழில்கள்**

பரதவர்கள் அவர்கள் வாழும் நிலத்தால் குறைந்தளவே பயனுன்று வாழ்ந்தனர்.

ஏனைய நிலங்களில் மக்கள் நிலத்தையே தம் வாழ்வின் அடிப்படையாக நம்பினர் பரதவர் உணவின் பொருட்டுக் கடலையே நம்புதலாக மைந்துள்ளன. கடல் தொழில் செய்வரைப் பற்றி குறிப்புகள் சங்க இலக்கியத்தில் மேலோட்டமாக வருகின்றன கடல் தொழில் செய்பவனை உறுதி மிக்க படகை ஆள்பவன் எனப் புறநானூறு கூறுகிறது (பா. எண்24) கணக்கயன் தத்தன் என்ற புலவர் இவர்களை கொடுந்திமில் பரதவன் (குறுந். 304) என்று கூறுகிறது. பரதவர்களில் சிலர் கொல்லும் தன்மை உடைய சுராமீன்களை ஒதுக்கி விட்டு வலம்புரிச் சங்குகளை எடுக்க கடலில் மூழ்குவதில் விருப்பம் உடையவர் என்றும் இவர்கள் இந்தத் தொழிலில் திறமை உடையவர்கள் என்றும் சேத்தன் கண்ணனார் (அகம்.350.1-2) கூறுகிறார். மேலும் பரதவர்கள் கடலில் விரைவாக செல்லும் படகில் செல்வர் கடல் தொழில் செய்வதற்காகப் படகில் உறுதியான புரிகளை உடைய கயிற்றின் முனையில் இரும்பு உளியை இறுக்கமாக கட்டி வைத்திருப்பர் பெரிய மீன்களை கண்டதும் கயிறுகட்டப்பட்ட உளியை எறிந்து மீனைப் பிடிப்பர் இவர்கள் இரவிலும் மீன் பிடிக்க செல்வர் அப்பொழுது கலங்களில் பெரிய விளக்கை ஏற்றிவைத்திருப்பர் இரவு முழுவதும்

### மீனவர்களின் வழிபாடு

நெய்தல் நிலத்தில் ஊர்க் கூட்டம் பனை மரங்களின் கீழே நடந்தது. இந்த மரங்களில் கடவுள் தங்கியிருப்பர் என்ற நம்பிக்கை(நற். 303) உண்டு என்பதை மீன் பிடிப் படகில் தெய்வம் உரைந்து இருக்கும் என்று நம்பினர். ஒரு கட்டுமரம் பழுதடைந்து விட்டால் ஒதுக்கி விடுவர் அதற்கு வழிபாடு செய்வதில்லை கடல்சார் மக்கள் கட்டுமரத்தைக் கடற்கரையில் ஒதுக்குப் புறத்தில் போட்டுவிடுவர் (நற் .315) பரதவர்கள் மத்தியில் வலையையும் படகையும் நல்ல நாள் பாத்துதான் கடலில் விடும் வழக்கம் இருந்தது அதனை

நாள் வலை முகந்த கோள்வல் பரதவர் 29

இந்த அடிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். மீனவர்கள் படகினை வழிப்பட்டனர் அவர்கள் அம்பியை ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட படகினை அதற்கு நல்ல புகையைக் காட்டி வணங்கினார். பிறகு சிறிய மலரையுடைய ஞாழலோடு சேர்ந்தோங்கிய மரத்தின் வேரடியிலே பிணைத்துப் போட்டனர். என்ற செய்தியை நற்றிணைப் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது. இதனை

***அலைத்தலால் மோதப்பட்டு முதிர்ந்த***
***தொழிலையுடைய அம்மியை ஓரத்தே நிறுத்தி***
***(நற்றிணை 140 பாடல்***

எனும் பாடல் வரிகள் கொண்டு தெளியலாம். மேலும் வெண்மையான காய்ந்த மணல் நிறைந்து இருக்கும் கடலோரத்தில் பரதவரின் வலை உலர்த்தப்பட்டிருக்கின்றது அங்கே அமைந்திருந்த வீடுகளின் முற்றத்தில் பெண்கள் (பரதவர் மகளிர்) சினைச் சுறாவின் கோட்டினை நட்டு அதனைத் தெய்வமாக எண்ணி வழிபாடு செய்தனர் இதனை

***புறவுக் கோட்டஞ் செயும் வனப்பிற்***
***பூவைமொழியார் விழிதான் வாழ்***
***(ஆனை.கா.புராணம்)***

குறிப்பிடுகிறது. இவ்வகையில் மீனவர்கள் தங்கள் தொழிலில் சிறப்படைய எண்ணி பலப்பல தெய்வங்களை வேண்டுகின்றனர். இந்த வழிபாடுகள் தாம் காலம் காலமாகத் தங்களைக் காத்து நல் வாழ்வினை அளித்து வருகின்றனர் என்பதில் ஐயமின்றி தொடர்ந்து வழிபாட்டை மேற்கொண்டு வாழ்ந்தனர்.

### பரதவர்களின் பொழுது போக்குகள்

மீன்பிடிக்கச் செல்லாத நேரத்தில் பெண்கள் கடற்கரையில் ஈர மண்ணில் பாவை செய்து விளையாடுவர் மேலும் கடல் மண்ணில் குறி எழுத்து எழுதுவர் என்றும், கடல்சார் மக்கள் குடிப்பதைத் தவறாகக் கருதவில்லை இவர் கள் குடித்து பற்றிய செய்திகள் பரவலாக வருகின்றன பகலில்

எளிதாகக் கிடைத்த மீனைக் கொடுத்துக் கள் வாங்கி எல்லோரும் பகிர்ந்து கொண்டனர் அக்கருத்தை

**மான்ற மான்ற மகிழ்ந்த பரதவர்**
**இனிது பெற பெருமீன் எளிதினில் மாறி**

(நற்.239)

என்ற பாடலடிக்கள் மூலம் அறிய முடிகிறது கடலில் பிடித்த மீன்களைக் கலத்தில் கொண்டு வருவதற்கும் பனை ஓலை பெட்டியைப் பயன்படுத்தனர் இந்தப் பெட்டியை பரதவரே முடைந்தனர் இரவில் மீன் பிடிக்கச் செல்லும் பொழுது படகில் விளக்கை ஏற்றி வைத்திருந்தனர்.

நெய்தல் நில மக்கள் வாழ்க்கை முறை

நெய்தல் நில மக்கள் மீன் பிடித்தல் உப்பு விளைவித்தல் ஆகியவற்றை முதன்மையான தொழிலாக கருதினர். கரையோரங்களில் இவர்கள் குடியிருப்புகள் பட்டினம் எனப்படும் சிறு குடியிருப்புகள் பாக்கம் எனப்படும் குளிர்ச்சி பொருந்திய நீரையுடைய பட்டினம் என்று சிறுபாணாற்றுப்படையும் கள்ளாகிய உணவினையருந்தும் குடிக்களைக் கொண்ட பாக்கம் என மதுரைக்காஞ்சியும் செருக்கினையுடைய பல குடி எழுந்திருக்கும் காரணமான பகையை அறியாத பாக்கம் எனப் பட்டினப் பாலையும் துறைக்கு அணித்தாயுள்ள பாக்கம் என நற்றியையும் செம்படவர் ஊராகிய பாக்கத்தைச் சிறப்பித்துக் கூறுவன பட்டினம் எனும் சொல் தற்பொழுது வழக்கு ஒழிந்துவிட்டது எனலாம். சென்னைப் பட்டணம் என்பதிற் போல பட்டணம் என்ற சொல்லே பெரும் நகரங்களைக் குறிக்க இப்பொழுது வழங்கும் செம்படவர்கள் வாழும் குடியிருப்புகளே இவ்வாறு பெரும் பட்டணங்களாகச் சிறந்திருத்தல் வேண்டும் இதற்கு அச்சிறு நகரங்களில் வாணிகம் பெருகியமையை ஒரு காரணமாக க் கூறலாம்.

**தொகுப்புரை**

- சங்கப்பாடல்களில் நெய்தல் திணைப்பாடல்கள் பெருமளவு இருந்தாலும் கடல்சார் மக்களைக் குறித்தும் கடல் தொழில் குறித்தும் செய்திகள் குறைவாகவே காணப்படுகின்றன.
- கடலில் மீன் பிடிக்க வலை, தூண்டில், உளி ஆகிய மூன்றையும் பயன் படுத்தினர் என்றும், மீனின் அளவுக்குத் தகுந்தவாறு அல்லது கால நிலைக்கு ஏற்றவாறு மீன் பிடிவலைகளை பயன் படுத்தினர் அவர்கள் பயன் படுத்திய வலை ஒரு வகைச்செடியின் கொடியால் பின்னப்பட்டது என்ற குறிப்பு உள்ளது இதில் முடிச்சுகள் இதிகம் தூண்டில் பற்றிய செய்திகள் மிகச் சிறிய அளவிலே உள்ளது.
- மிகப் பெரிய மீன்களையும் சுறாவையும் பிடிக்க உளி போன்ற ஒரு கருவியைப் பயன்படுத்தினர். இந்த உளியை கயிற்றில் கட்டி மீனின் மேல் எறிவர் ஊளியை முங்கிலில் நுனியில் கட்டியும் எறிவர் இவ்விரு முறைகளும் மீனைத்தாக்கிய உளி எறிந்தவனின் கைக்குத் திரும்பி வந்து விடும் மீனின் மீது உளியை எறிபவன் தொழில் தெறிந்தவனாக இருப்பான் எனும் செய்தியை அறிந்து கொள்ளலாம்.
- இரவிலும் பகலிலும் மீன் பிடிக்கும் பழக்கம் இருந்தது பகலில் மீன் எளிதாக கிடைத்தன அதனால் அதைக் குறைந்த விலைக்கு கொடுத்தனர். இரவில் மீன் பிடிக்கச் செல்லும் போது கிளிஞ்சல் விளக்கை கலத்தில் வைத்திருந்தனர். விளக்கை எரிக்க மீன் எண்ணெய் பயன்படுத்தினர்
- மீன் அதிகம் கிடைத்தால் உப்புக் கணடம் போட்டு வெயியூருக்கு விற்பனை செய்தனர். உள்நாட்டில் மீன் பிடிக்கும் இனம் பற்றிய செய்திகள் கிடைக்க வில்லை

*ஆனால் பாணர்கள் குளத்தில் மீனைப் பிடித்துள்ளனர் என்ற குறிப் பொன்று உண்டு .*

**துணைநூல் பட்டியல்**

1. *அகநானூறு - கம்பர் விலாஸ் புத்தக சாலை மைலாப்பூர் 1920*
2. *இலக்கியதீபம் ×எஸ்.வையாபுரிப்பிள்ளை முதற்பதிப்பு 1952*
3. *ஐங்குறுநூறு × உ.வே.சாமிநாதையர் குறிப்புடன் எஸ். கலியாண சுந்தரையர் பதிப்பு சென்னை -1944*